தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 20, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஆகஸ்டு 5, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

அன்பர்களின் அகமாகிய மலரில் அமர்ந்திருக்கும் கடவுளின் பெருமை மிக்க திருப்பாதங்களைத் தொடர்ந்து வணங்குகிறவர்கள் இந்த நிலவுலகில் நீண்ட நாள் வாழும் தகுதியைப் பெறுவர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

330—

துணை மின் நிலையம்

***35979—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், அயன்கரிசல்குளத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், அயன்கரிசல்குளம் பகுதிக்கு, எரிச்சநத்தம் 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு 10 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி ஒன்று இயக்கத்திலுள்ளது. இம்மின்மாற்றியின் உச்ச மின் பளு 9.1 M.V.A. ஆகும். பெருகி வரும் மின் பளுவை கருத்தில்கொண்டு, கூடுதலாக 10 M.V.A. திறன் கொண்ட ஒரு மின்மாற்றி அமைக்க, நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் மின்மாற்றி அமைப்பதற்கான பணிகள் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முடிவடைந்துவிடும். மேலும், அயன்கரிசல்குளம் பகுதியிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அதுலுக்கப்பட்டி பகுதியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைத்து 8 M.V.A. மின் திறன் கொண்ட மின்மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு, அதற்காக இரண்டு ஏக்கர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. இத்துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் 2015–2016 ஆம் நிதியாண்டிற்குள் முடிவடைந்துவிடும். எனவே, அயன்கரிசல்குளம் பகுதிக்கு தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு தற்போது அவசியம் எழவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள அயன்கரிசல்குளம் பகுதி, விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும்*

2014 ஆகஸ்ட் 5]

உள்ளடக்கிய பகுதியாகும். இந்தக் கிராமத்தைச் சுற்றி அழகாபுரி, காந்திநகர், வடுகப்பட்டி, களத்தூர், எஸ்.அம்மாபட்டி, வெள்ளப்பொட்டல், கோவிந்தநல்லூர், ஆயர்தர்மம், கொண்டையம்பட்டி, சுரக்காய்பட்டி, இலந்தகுளம், வலையன்குளம், அக்னாபுரம், தைலாபுரம் உள்ளிட்ட முப்பது கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களுக்கு தற்போது எரிச்சநத்தம் பகுதியிலுள்ள துணை மின் நிலையத்தின் மூலமாக மின் விநியோகம் செய்யப்படுகின்றது. இந்தப் பகுதியில் கூடுதல் மின் இணைப்புகள் உள்ளதால், குறைந்த அழுத்த மின்சாரமே கிடைக்கின்றது. குறிப்பாக காலை, மாலை நேரங்களில் இதுபோன்ற நிலை ஏற்படுவதால், பள்ளிக் குழந்தைகளும், தாய்மார்களும் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். மேலும், மேற்படி எரிச்சநத்தம் துணை மின் நிலையம்மூலம் அதிக மின் இணைப்புகளுக்கு மின் விநியோகம் வழங்கப்படுவதால், இதுபோன்ற நிலை ஏற்படுகின்றது. எனவே, இவற்றைக் கருத்தில்கொண்டு, அயன்கரிசல்குளம் கிராமத்தில் புதிய துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலை படித்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதனை சரியாகக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். உங்கள் பிரச்சினைக்கு நான் படித்த பதிலில் ஏற்கெனவே தீர்வு காணப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அயன்கரிசல்குளம் பகுதிக்கு வேண்டிய மின்சாரம், எரிச்சநத்தம் கிராமத்திலுள்ள 110/11 கிலோ வோல்ட் கொண்ட துணை மின் நிலையத்திலிருந்து வழங்கப்பட்டு வருகின்றது. இலந்தகுளம் 11 கே.வி. மின்னூட்டியிலிருந்து, அதாவது Electrical Feeder–லிருந்து மின்சாரம் வழங்கப்படுகிறது. நடைமுறையில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கும்போது, 8 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றிகள்தான் நிறுவப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அந்தப் பகுதியில் மின் பளு அதிகமாக இருப்பதைக் கருத்தில்கொண்டுதான், இங்கே கூடுதலாக 10 M.V.A. திறன் கொண்ட மின்மாற்றி ஒன்றை அமைப்பதற்கு, நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, இன்னும் இரண்டு மாத காலத்திற்குள்

அந்தப் பணிகள் முடிவடைய இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில், மொத்த மின் பளுவே 9.1 M.V.A. திறன் கொண்டதாகத்தான் இருக்கிறது. ஆனால், 20 M.V.A. திறன் கொண்ட அளவிற்கு மின்மாற்றிகள் அமைக்கப்படவுள்ளன. 20 M.V.A. திறன் கொண்ட அளவிற்கு தற்போது அதன் தரம் உயர்த்தப்படுகிறது. ஆகவே, தரம் உயர்த்தப்படுகின்ற இந்தத் துணை மின் நிலையத்திலிருந்து உங்கள் பகுதிக்குத் தேவையான மின்சாரம் தடையின்றி கிடைக்கும். மேலும், அங்கு மின்னழுத்த பிரச்சினை வருவதற்கு வாய்ப்பிருக்காது.

முற்பகல் 10–05

மற்றொன்று, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அயன்கரிசல்குளத்தில் இப்போது இருக்கின்ற உச்சபட்ச மின் பளு 0.6 M.V.A. திறன் கொண்ட அளவிற்கு மட்டும்தான் இருக்கிறது. ஆனால், பக்கத்திலே இருக்கின்ற 3 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அ. துலுக்கப்பட்டியில் 4 M.V.A. திறன் கொண்ட அளவுக்கு மின் பளு இருக்கிறது. ஆகவேதான் மின் பளு 0.6 எம்.வி.ஏ. திறன் கொண்ட பகுதியிலே அமைப்பதற்குப் பதிலாக, 4 M.V.A. திறன் கொண்ட அதுலுக்கப்பட்டியிலே, மின் பளு தேவை இருக்கின்ற பகுதியிலே அமைப்பதுதான் நிருவாகரீதியாக அந்தப் பகுதிக்குப் பயனுள்ளதாக அமையும் என்ற காரணத்தினால், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையிலே, பக்கத்திலே இருக்கிற அதுலுக்கப்பட்டியிலே புதிய 33/11 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 2 ஏக்கர் நிலமும் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. விரைவிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதியிலே பணிகளை முடுக்கிவிட்டு, புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கும், ஏற்கெனவே வத்திராயிருப்பு ஊராட்சியிலே இருக்கின்ற துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே அந்தப் பகுதியிலுள்ள மின் தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை, எம்.பி.கே. புதுப்பட்டி, எஸ். கொடிகுளம் போன்ற பகுதிகளில் துணை மின் நிலையம் அமைக்கப்படுமென்று ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். அந்தப் பணி எந்த அளவிற்கு உள்ளது? மேற்படி இடங்களில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திலே 6 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே திட்டமிடப்பட்டு, அதிலே 2 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 4 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விருதுநகர் மாவட்டம், சமரசபுரம், அருப்புக்கோட்டை பகுதிகளில் 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. 2014–2015 ஆம் நிதியாண்டிற்குள் அந்தப் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருதுநகர், முத்துராமலிங்கபுரத்திலே 110/33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் ஏற்கெனவே நிறுவப்பட்டுவிட்டது. அதேபோல, விருதுநகர், கேளம்பட்டியிலே 110/33/11 K.V. திறன் கொண்ட புதிய துணை மின் நிலையத்திற்கு நிலம் கண்டறியும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிலம் கிடைத்தால், அந்தப் பணியும் துவங்கப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. தகுதியான நிலம் கிடைக்காததால், காலதாமதமாகிக்கொண்டிருக்கிறது. முடிந்தால், மாண்புமிகு உறுப்பினர்கூட அதற்கு உதவி செய்யலாம். கேளம்பட்டிக்கு அடுத்தபடியாக, நாராயணபுரத்தில் 110/33/11 K.V. திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு, முடிவு செய்யப்பட்டு, 6,530 சதுர மீட்டர் தனியார் நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. எனவே, அந்தப் பகுதியிலும் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி விரைவாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, விருதுநகர் மாவட்டம், பந்தல்குடியிலே 110/33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு

போதிய இடம் கிடைக்கவில்லை. எவ்வளவு முயற்சித்தும் அந்தப் பகுதியிலே கிடைக்கவில்லை. அதனால், அதற்கு அருகிலுள்ள வேலாயுதபுரத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இப்பொழுது அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியபுளியம்பட்டியில் ஏற்கெனவே 33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை தவிர, மாண்புமிகு உறுப்பினர் வேறு இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அந்தப் பகுதிகளிலுள்ள மின் பளுவைக் கருத்தில் கொண்டு, ஆய்வு செய்து, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதுகுறித்து ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 331, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

331—

மேம்பாலம்

***18901—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் தேவர் சிலை அருகே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.